செய்தி வெளியீடு எண் : 377 நாள் : 25.02.2023

# முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களின் தாயார் மறைவெய்தியதையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி வாயிலாக திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களை தொடர்பு கொண்டு தனது இரங்கலைத் தெரிவித்தார்

முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் தாயார் திருமதி பழனியம்மாள் அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தியதையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (25.2.2023) திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு தனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தார்.

இதற்கிடையே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பில், முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் தாயார் உடலுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள் இறுதி மரியாதை செலுத்தினார்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in